நிலைமை ஏற்பட்டு, தீவனங்கள் கிடைக்கவில்லை, ஊரிலேயிருக்கிற சினிமா கொட்டகைகள் வசூலாகவில்லை, பஸ்கள் தேனியிலே நின்றுவிட்டன, கம்பம் வழியாகப் போகவில்லை, யாரிடமும் வருமானமில்லை, விவசாயக் கூலிகள் எட்டணா, ஆறணா கொடுத்தால் வேலைக்கு வருவார்கள்" என்ற நிலைகள்தான் பஞ்சத்திற்கு அறிகுறியாகும். நண்பர் தியாகராஜன் அவர்கள் மாவட்டக்கழகத் தலைவராக இருந்திருக்கிறார்கள். பஞ்சம் பற்றி அவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் கொஞ்சம் மழை யில்லாமல் இருந்தது. கிணறுகள் எல்லாம் வறண்டிருந்தன, செப்டம்பர் வரையில். அதற்குப் பிறகு நல்ல மழை பெய்தது. அவர் களுக்குத் தெரியும். செப்டம்பருக்கு பிறகு அவருடைய வட்டாரத்திலே மழை பெய்தது. வழக்கமாக ஏற்படக்கூடிய அந்த நிலைமை பஞ்சம் என்பதற்கான இலக்கணத்திற்கு உள்பட்டதாகாது. ஜில்லாபோர்டு நிர்வாகம் தெரிந்து நண்பர் தியாகராஜனுக்கு பஞ்சமென்றால் என்ன வென்று நன்கு தெரியும். அவர் கூறியது பஞ்சத்திற்கான நிலைமையில் வரவில்லை.

Seizure of paddy.

*** 197. *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—**

(*a*) whether it is a fact that police entered into the residence of Thiru Nagamani Naicker, in Thulasapuram Kandigai village in Sriperumbudur taluk of Chingleput District and seized paddy while he was away from his residence on 21st September 1967 ;

(*b*) the reasons therefor ; and

(c) the result of the case filed against the Government by Thiru Nagamani Naicker in the High Court in this regard ?

நெல் பறிமுதல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, துளசாபுரம் கண்டிகை கிராமத்தில் திரு நாகமணி நாயக்கர் வீட்டில் 21–9–1967 அன்று அவர் இல்லாத நேரத்தில் போலீசார் சென்று நெல் பறிமுதல் செய்தது உண்மையா ?

(இ) காரணம் என்ன ?

(உ) இதுபற்றி உயர்நீதி மன்றத்தில் நாகமணி நாயக்கர் சர்க்கார் மீது போட்ட வழக்கு என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ–உ) புகார் செய்யப்பட்டபடி சோதனையோ, பறிமுதலோ நடக்கவில்லை. ஆனால், இது சம்பந்தமாக தனிப்பட்ட பிராது ஒன்று நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், இதைப் பற்றி மேலும் தகவல்கள் தருவது பொருத்தமல்ல.

Fire Accidents

*** 198. *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Mnister for Food and Revenue be pleased to state :—**

(*a*) the number of houses which caught fire and were reduced to ashes at Nakkala Kottai situated in Kovilpatti Panchayat Union of Tirunelveli District in 1967 ;

(*b*) the loss incurred therein;